05.11.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நன்னீரில் கிஃப்ட்திலேப்பியா மீன் வளர்ப்பு பயிற்சி



நன்னீரில் கிஃப்ட்திலேப்பியா வகை மீன் வளர்ப்பு குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி புதன்கிழமை அளிக்கப்பட்டது.

புதுச்சேரி அரசின் வேளாண் துறை மற்றும் வேளாண் தொழில்நுட்ப முகமை (ஆத்மா) சார்பில் நன்னீர் மீன் வளர்ப்பில் திலேப்பியா இனத்தில் புதிய வகையான கிஃப்ட்திலேப்பியா மீன் வளர்ப்பு குறித்த செயல் விளக்கப் பயிற்சி முகாம் ஆத்மா குழு உறுப்பினர்களுக்கு மேலவாஞ்சூரில் உள்ள மீன் பண்ணையில் புதன்கிழமை

நடைபெற்றது. மீன்வளத்துறை ஆய்வாளர் பாலமுரளி மீன் வளர்ப்பு குறித்தும் அதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்கினார். மீன் வளர்க்கும் ஆர்வலர்கள், கிஃப்ட்திலேப்பியா மீன் வளர்த்து, குறைந்த காலத்தில் அறுவடை செய்து பயனடையலாம் என்றார். திருமலைராயன்பட்டினம் வேளாண் அலுவலர் இந்துமதி, ஆத்மா திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் கலந்துகொண்டனர். பயிற்சியில் கலந்துகொண்ட ஆத்மா குழு உறுப்பினர்களுக்கு கிஃப்ட்திலேப்பியா மீன் குஞ்சுகள் இலவசமாக வழங்கப்பட்டன.

## அடவிநயினார், கடனாநதி, ராமநதி அணைகளின் நீர்மட்டம் உயர்வு

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்துவரும் மழையால், கடனாநதி, ராமநதி, அடவிநயினார் அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பருவமழை பரவலாகப் பெய்து வருகிறது. அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதியிலும் மழை பெய்து வருகிறது. மூன்று மாதங்களுக்கு பிறகு பெய்து வரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து, நீர்மட்டமும் உயரத் தொடங்கியுள்ளது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 190.86 கனஅடி, மணிமுத்தாறு அணைக்கு 19 கனஅடி, கடனாநதி அணைக்கு 101 கனஅடி, ராமநதி அணைக்கு 11 கனஅடி, கருப்பாநதி அணைக்கு 12 கனஅடி, அடவிநயினார் அணைக்கு 25 கனஅடி நீர்வரத்து இருந்தது. வெள்ளிக்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 2.80 அடி உயர்ந்து 26.20 அடியாகவும், சேர்வலாறு அணை நீர்மட்டம் 55.77 அடி, மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 34.35 அடி, கடனாநதி அணை நீர்மட்டம் 4 அடி உயர்ந்து 34 அடி, ராமநதி அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 32 அடி, கருப்பாநதி அணை நீர்மட்டம் ஓரடி உயர்ந்து 30.84 அடி, அடவிநயினார் அணை நீர்மட்டம் 3.25 அடி உயர்ந்து 43.25 அடி, வடக்குப் பச்சையாறு அணை நீர்மட்டம் 2 அடி, நம்பியாறு அணை நீர்மட்டம் 9.51 அடி, குண்டாறு அணை நீர்மட்டம் 21.12 அடி, கொடுமுடியாறு அணை நீர்மட்டம் 3.00 அடியாகவும் இருந்தது.

வெள்ளிக்கிழமை பிற்பகலில் இருந்து திருநெல்வேலி மாவட்டத்தில் அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, விக்கிரமசிங்கபுரம், முக்கூடல், சுத்தமல்லி, பேட்டை, வீரவநல்லூர், சேரன்மகாதேவி, கோபாலசமுத்திரம், பிரான்சேரி,

தருவை மேலப்பாளையம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி, தாழையூத்து, சிவந்திப்பட்டி, மானூர் உள்பட பல்வேறு இடங்களில் மழை பெய்தது. மழையால் மேலப்பாளையம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி சந்திப்பு, நகரம் பகுதியில் தாழ்வான இடங்களில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பருவமழையை வரவழைக்கும் இசை**

சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவரான முத்துசாமி தீட்சிதர் எட்டையாபுரம் பகுதியில் மழை

இல்லாமல் வறட்சி நிலவியபோது சீலங்கி ராகத்தில் 'ஆனந்தாம்ருதகர்ஷிணி அமிர்தவர்ஷினி' என்ற பாடலைப் பாடிய போது மழை பெய்தது. அன்று முதல் சீலங்கி ராகம் அமிர்தவர்ஷினி என புதிய பெயரைப் பெற்றது. தமிழிசையில் மேகராகக் குறிஞ்சி என்ற பண் மழையை

வரவழைக்கும் என கூறுகின்றனர். எங்காவது வறட்சி என்றால் மேகராகக் குறிஞ்சியில் தான் பதிகங்கள் பாடப்பட்டிருக்கின்றன. திருஞானசம்பந்தருடைய திருவையாறுப் பதிகம் மேகராகக் குறிஞ்சி பண்ணால் ஆனது.

**மானிய விலையில் சான்று விதைகள் வினியோகம்: வேளாண் இணை இயக்குனர் தகவல்**

கிருஷ்ணகிரி: 'கிருஷ்ணகிரி மாவட்டத்தில், நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, மானிய விலையில் சான்று விதைகள் வினியோகம் செய்யப்படுகிறது' என, வேளாண்மை இணை இயக்குனர் சங்கரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், கெலவரப்பள்ளி அணை, கே.ஆர்.பி.அணை, பாரூர் ஏரி ஆகியவை முழு கொள்ளளவு நிலையில் உள்ளதால், ரபி பருவத்தில், 10 ஆயிரம் ?ஹக்டேர் அளவில் நெல் சாகுபடி செய்யப்படும். இந்த பருவத்திற்கு தேவையான சான்று பெற்ற உயர்ரக அதிக விளைச்சல் தரக்கூடிய நெல் ரகங்கள், மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் தயார் நிலையில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. நெல் விதைகளை விதை கிராம திட்டம் மற்றும் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டம் ஆகியவற்றில், கிலோ ஒன்றுக்கு, 10 ரூபாய் மானியமாக விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்படுகிறது. மேலும், தற்போது நெல் நடவு கூலி ஆட்கள் பற்றாக்குறை உள்ளதால், நெல் விவசாயத்தை ஊக்குவிக்க மத்திய, மாநில அரசுகள் இணைந்து இயந்திரம் மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு, ஹெக்டேருக்கு, 5,000 ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இந்த ரகங்கள் உயர் விளைச்சல் தரக்கூடியவையாகவும், சன்ன ரகம் குறுகிய வயதுடையவை, பூச்சி தாக்குதல் குறைவாகவும், சாயாத தன்மை கொண்டதாகவும், புகையான் நோய் எதிர்ப்பு தன்மை கொண்டதாகவும் உள்ளது. எனவே, விவசாயிகள் அனைவரும் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி, மானிய விலையில் சான்று பெற்ற நெல் விதைகளை வாங்கி பயன்பெற வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## மானிய விலையில் கால்நடை தீவனம்: விவசாயிகள் எதிர்பார்ப்பு

பெருந்துறை: மானிய விலையில், கால்நடை தீவனம் வழங்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் கடந்த, இரண்டு மாதங்களாக மழை பெய்யாததால், கடும் வறட்சி நிலவுகிறது. குறிப்பாக, பெருந்துறை சுற்றுவட்டாரப் பகுதிகளில், மானாவாரி நிலங்களில் பயிரிடப்பட்ட சோளம் மற்றும் நிலக்கடலை பயிர்கள் கருகின. மேலும், கீழ்பவானி வாய்க்காலில் மிகவும் தாமதமாக தண்ணீர் திறக்கப்பட்டது. இதனால் வாய்க்கால் பாசன சாகுபடியும் வெகுவாக குறைந்தது. இந்நிலையில் சோளத்தட்டு, கடலைக் கொடி, வைக்கோல் போன்ற கால்நடைத் தீவனங்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறியதாவது: வறட்சியால் தீவனங்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மேலும், மாட்டுத் தீவனம், தவிடு போன்றவற்றின் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது. மானாவாரி விவசாயிகள், தங்கள் பொருளாதாரத்துக்கு பால் உற்பத்தியையே பெரிதும் நம்பி உள்ளனர். தீவன விலை உயர்வால், நஷ்டத்தை சந்திக்க வேண்டியுள்ளது. எனவே, மாட்டுத்தீவனம், தவிடு போன்றவற்றை கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களின் மூலம், மானிய விலையில் வழங்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

## விதை உற்பத்தி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி வேளாண்மை துறை சார்பில், விவசாயிகளுக்கான விதை உற்பத்தி பயிற்சி நடந்தது.

கள்ளக்குறிச்சி வேளாண்மை விரிவாக்க மையத்தில், நடந்த விதை கிராமத் திட்ட பயிற்சி முகாமிற்கு, வேளாண்மை உதவி இயக்குனர் கோவிந்தன் தலைமை தாங்கினார்.

வேளாண்மை அலுவலர் அன்பழகன், தேவி, விதைசான்று அலுவலர் பொன்னுராசன் ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

இதில், நெல்லில் விதைப் பண்ணை அமைப்பது, நெல் ரகத் தேர்வு, விதை நேர்த்தி, களை நிர்வாகம், கலவன்கள் நீக்குவது, ஒருங்கிணைந்த பூச்சி நோய் மற்றும் பயிர் அறுவடை மகசூல் குறித்து பயிற்சிகள் அளிக்கப்பட்டது.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை, அட்மா திட்ட வட்டார தொழில் நுட்பட மேலாளர் தேவி, உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் சிவபிரகாசம், மணிமேகலை ஆகியோர் செய்திருந்கனர். இப்பயிற்சியில், கள்ளக்குறிச்சி பகுதியைச் சேர்ந்த விதை உற்பத்தி விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

## நாட்டுக்கோழி வளர்ப்பு நவ., 8ல் பயிற்சி முகாம்

கரூர்: பண்டுதகாரன்புதூர் கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மைய தலைவர் வசந்தகுமார் வெளியிட்ட அறிக்கை: பண்டுதகாரன்புதூர் கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மையத்தில் வரும், 8, 9ல் நாட்டுக்கோழி வளர்ப்பு இலவச பயிற்சி வழங்கப்படும். இதில், கோழி வளர்ப்பு முறை, கொட்டகை அமைப்பு, தீவனப் பராமரிப்பு, நாட்டுக்கோழிகளை தாக்கும் நோய்கள் குறித்து விளக்கம் அளிக்கப்படும். மேலும், அவற்றை தடுக்கும் முறைகள், மரபுசார் மருத்துவ முறைகள், குடற்புழு நீக்கம், தடுப்பூசி அளித்தல், விற்பனை உத்திகள், பண்ணை பொருளாதாரம் ஆகிய தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டு, அத்துடன் களப்பயிற்சியும் வழங்கப்படும். பங்கேற்க விரும்புவோர், 04324 - 294335, 73390 57073 அழைப்பு எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## உணவில் காளான் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு அவசியம் வேளாண்துறை அறிவுறுத்தல்

பெரியகுளம், 'பெரியகுளத்தில் காளான் சீசன் தொடங்கி உள்ளதால் அவற்றை உணவுக்கு பயன்படுத்தும் போது கவனமாக இருக்க வேண்டும், என, வேளாண்துறை அறிவுறுத்தி உள்ளது.

வடகிழக்கு பருமழை தொடங்கிவிட்டாலே இயற்கை காளான் சீசனும் தொடங்கிவிடும். சில வாரங்களாக பெரியகுளம் பகுதியில் சாரல்மழையும், அவ்வப்போது கனமழையும் பெய்தது.

அதன் தொடர்ச்சியாக காளான் முளைக்க தொடங்கிவிட்டது. தற்போது தோட்டங்களிலும், வனப்பகுதிகளில் விளையும் காளான்களை அதிகாலையில் சிலர் சேகரித்து வருகின்றனர். குடைகாளான், பட்டன் காளான் விற்பனைக்கு வருகிறது. ஒரு கிலோ ரூ.500 முதல் ரூ.600 வரை விற்கப்படுகிறது. மக்கு காளான் சில மரங்களில் கீழே அரைகிலோ முதல் முக்கால்கிலோ எடையுள்ள மக்கு காளான் முளைத்திருக்கும். சிலர் இதனையும் சேகரித்து விற்கின்றனர். இந்த வகை காளான் விலை குறைவாக கிடைக்கிறது என வாங்கக்கூடாது. இதனை சாப்பிட்டால் வாந்தி, மயக்கம் ஏற்படும். எனவே காளான்களை அடையாளம் கண்டு, அவை சாப்பிடுவதற்கு தகுதியானதான என பார்த்து

அதிகாரிகளிடம் விளக்கம்கேட்டு பின்னரே பயன்படுத்த வேண்டும், என, வேளாண்துறை அறிவுறுத்தி உள்ளது.

## உயராத சண்முகாநதி அணை நீர்மட்டம்

உத்தமபாளையம், ராயப்பன்பட்டி மலையடிவாரத்தில் சண்முகா நதி அணை உள்ளது. மொத்த உயரம் 52.5 அடி. சின்னஓவுலாபுரம், கன்னிசேர்வைபட்டி, ராயப்பன்பட்டி, ஆனைமலையன்பட்டி, ஓடைப்பட்டி உள்ளிட்ட 10 க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த ஆயிரத்து 400 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

இந்தாண்டு தென்மேற்கு பருவமழை ஏமாற்றியதால் தேனி, மதுரை மாவட்டங்களில் குடிநீருக்கே கட்டுப்பாடு ஏற்படும் அவலம் நிலவியது. வடகிழக்கு பருவமழையை பலரும் எதிர்பார்த்துள்ளனர். பருவமழை துவங்கியபோதும் தொடர்ந்து பெய்யவில்லை. இதனால் முல்லைப் பெரியாறு அணையிலும் குறிப்பிட்ட அளவு நீர்மட்டம் உயரவில்லை. சண்முகா நதி அணையின் நீர் மட்டம் நீண்ட நாட்களாக 26 அடியாகவே உள்ளது. இது நேரடி பாசன வசதியளிக்காவிட்டாலும், இப்பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான கிணறுகளில் நிலத்தடி நீர் மட்டம் உயர உதவுகிறது.

கடந்தாண்டு இதே நாளில் வினாடிக்கு 20 கனஅடி நீர் வரத்தும், நீர்மட்டம் 28.80 அடியாக இருந்தது. ஆனால் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை துவங்கி ஒரு வாரத்தை நெருங்கியும், அணையின் நீர்மட்டத்தில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. அணைக்கு நீர்வரத்து முற்றிலும் இல்லை.

ராயப்பன்பட்டி பகுதி விவசாயிகள் கூறுகையில், 'வடகிழக்கு பருவமழை ஏமாற்றிவிடுமோ என்ற அச்சம் உள்ளது.கிணறுகளில் நீர்மட்டம் அபாய நிலைக்கு சென்றுள்ளது. மழையை எதிர்பார்த்து காத்துள்ளோம்,' என்றனர்.

## சிறு தானிய பயிர்களுக்கான விதை கிராம திட்ட பயிற்சி

நாமகிரிப்பேட்டை: நாமகிரிப்பேட்டை அடுத்த, ஆர். புதுப்பட்டியில் சிறுதானிய பயிர்களுக்கான விதை கிராம திட்ட பயிற்சி அளிக்கப்பட்டது. இதில், 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். நாமகிரிப்பேட்டை வேளாண் உதவி

இயக்குனர் அசோகன், வேளாண் துறையின் மானியத் திட்டங்கள், பிரதம மந்திரியின் புதிய பயிர் காப்பீடு திட்டம் குறித்து விரிவாக கூறினார். நாமக்கல் விதைச்சான்று உதவி இயக்குனர் ஜெகதீசன், விதை பண்ணை அமைப்பதின் அவசியத்தை விளக்கினார். நாமக்கல், லத்துவாடி வேளாண் அறிவியல் நிலையத்தில் பூச்சியியல் துறை விஞ்ஞானி சங்கர், சிறு தானியங்கள் பயிரிடும்போது, மேற்கொள்ள வேண்டிய பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து பேசினார். ஏற்பாடுகளை துணை வேளாண் அலுவலர், அட்மா பணியாளர்கள் செய்திருந்தனர்.

## மூலிகை பூச்சி விரட்டி: விவசாயிகளுக்கு பயிற்சி

ராசிபுரம்: மூலிகை பூச்சி விரட்டி குறித்து, பயிற்சி மற்றும் செயல்முறை விளக்கம், கல்யாணி கிராமத்தில் தனியார் கல்லூரியின் சார்பாக, நேற்று நடந்தது. புதுச்சத்திரம் அடுத்த, கல்யாணி கிராமத்தில், மூலிகை பூச்சி விரட்டி குறித்த பயிற்சி, நாமக்கல் தனியார் வேளாண் கல்லூரி மாணவியரால் நடத்தப்பட்டது. இதில், மூலிகை பூச்சி விரட்டி குறித்த பயிற்சி, செய்முறை விளக்கத்தை மாணவியர் விவசாயிகளுக்கு விளக்கினர். மேலும், பூச்சி நோய் தாக்குதல், அவற்றை கட்டுப்படுத்த மூலிகை பூச்சி விரட்டியின் பயன்பாடு பற்றியும் எடுத்துரைத்தனர். தொடர்ந்து, எளிதில் கிடைக்கக் கூடிய மூலிகை செடிகளைக் கொண்டு, இயற்கை பூச்சி விரட்டி செய்முறை விளக்கம் அளித்தனர். இதில், 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## பயறு வகை விதைகள் உற்பத்தி குறித்து பயிற்சி

ராசிபுரம்: ராசிபுரம் அடுத்த, முத்துகாளிப்பட்டியில், விதை கிராமத் திட்டத்தில், 40 விவசாயிகளுக்கு பயறு வகை விதைகள் உற்பத்தி குறித்து பயிற்சி வழங்கப்பட்டது. மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கலியராஜ் தலைமை வகித்தார். வேளாண் துணை இயக்குநர் லோகநாதபிரகாசம், பிரதமரின் பயிர் காப்பீட்டு திட்டத்தின் பயன்கள் பற்றி விரிவாக கூறினார். நாமக்கல் விதை சான்று உதவி இயக்குனர் ஜெகதீசன், விதைச்சான்று நடைமுறைகள் பற்றி எடுத்துக் கூறினார். ராசிபுரம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் ராஜகோபால், வேளாண் துறை சார்பாக செயல்படுத்தி வரும் மானிய திட்டங்கள் பற்றி விளக்கினர். மேலும், உயிர் உர விதை நேர்த்தி மற்றும் ட்ரைகோடெர்மா பூஞ்சான விதை நேர்த்தி குறித்த செயல்

விளக்கம் அளிக்கப்பட்டது. ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள், அட்மா திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.

**செட்டிநாடு உணவுக்கு மவுசு... இனி திராட்சைக்கும் தான்...**



கட்டடக் கலையில் பெயர் பெற்ற காரைக்குடி மெல்ல மெல்ல விவசாய விருத்தியையும் எட்டி வருகிறது. செம்மண், களிமண், உலர் மண், உலர் களி மண் என செட்டிநாட்டின் ஊருக்கேற்ப மண் வகை மாறுபட்டாலும், பெரும்பாலும் இருப்பது செம்மண் கலந்த சரளை மண் தான். மண்வெட்டி கொண்டு வெட்டினால், கல் பூமியில் விவசாயம் எவ்வாறு கால் பதிக்கும் என பலர் சந்தேகிப்பர்.

சந்தேகங்களை தவிடு பொடியாக்கி விவசாய உற்பத்தியில் மெல்ல, மெல்ல தன் இலக்கை எட்டி வருகிறது காரைக்குடி.

திண்டுக்கல், தேனிக்கு மட்டுமே உரித்தான பன்னீர் திராட்சை விவசாயம், தற்போது காரைக்குடியில் கால் பதித்திருப்பதன் மூலம் அடுத்த கட்ட விவசாய புரட்சிக்கு வித்திட்டுள்ளது. முதல் விவசாயத்திலேயே முப்போக திராட்சை விளைச்சலை எட்டியிருக்கிறார் காரைக்குடி விடுதலை அரசு.

ஓ.சிறுவயல் அருகே பேயன்பட்டியில் 85 சென்டில் திராட்சை பயிரிட்டு தற்போது அறுவடையை எதிர்பார்த்து காத்துள்ளார்.

அவர் கூறியதாவது: ஆரம்பத்தில் வீட்டு உபயோகத்துக்காக, 12 பன்னீர் திராட்சை குச்சிகளை தேனியில் இருந்து வாங்கி நட்டு வளர்த்தேன். நல்ல விளைச்சல் தந்தது. தற்போது திண்டுக்கல், தேனியிலிருந்து குச்சி வாங்கி வந்து 85 சென்டில் பயிரிட்டுள்ளேன்.

இது ஒரு பணப்பயிர். மூன்று மாதத்துக்கு ஒரு முறை அறுவடை செய்யலாம். ஒரு செடி 10 முதல் 15 ஆண்டு வரை பலன் தரக்கூடியது. 10 ஆண்டு வரை முழு பலன்

தரும். குச்சிகளை வாங்கி வந்து பதியம் போட்டால் 10 நாளில் கிளைகள் உற்பத்தியாகும். அதை நிலத்தில் நட வேண்டும்.

10க்கு 10 இடைவெளியில் கல்லுக்கால் பந்தல் போட்டு 10 மி.மீ., நெடுங்கம்பியை கல்லுக்காலின் மத்தியில் வருமாறும், குறுக்கு கம்பியை அதற்கு ஊடாகவும் ஒரு அடிக்கு, ஒரு அடி இடைவெளி விட்டு பந்தல் போட வேண்டும். நிலத்தில், 2 அடி ஆழத்தில் குழி தோண்டி மரக்கிளைகளை போட்டு மட்க செய்து, மண்புழு உரம் இட வேண்டும், கடலை புண்ணாக்கு, ஆமணக்கு புண்ணாக்கு கரைசலை 15 நாளுக்கு ஒரு முறை செடியின் தூர் பகுதியில் ஊற்ற வேண்டும். ஒரு செடிக்கு ஒரு லிட்டர் ஊற்ற வேண்டும். ஒரு மாத இடைவெளியில் மண்ணை கிளறி விட வேண்டும்.

மாட்டு எரு தேவைக்கேற்ப ஒன்றரை மாத இடைவெளியில் இட வேண்டும். ஆறு மாதத்தில் கொடி வந்து பூ பூக்க ஆரம்பித்து விடும். ஒரு ஏக்கருக்கு மூன்று லட்சம் ரூபாய் வரை செலவாகும்.

ஒரு முறை முதலீடு தான். அதன் பிறகு உரம் மற்றும் தண்ணீருக்கான செலவு மட்டுமே. அதிக பட்சம் ஏக்கருக்கு எட்டு டன், குறைந்த பட்சம் 5 டன் விளைச்சல் எடுக்கலாம். ஆண்டுக்கு ஐந்து லட்சம் ரூபாய் வரை வருமானம் பார்க்கலாம். தண்ணீர் தேங்கி நிற்காமல் பார்த்து கொள்ள வேண்டும் என்றார். தொடர்புக்கு 94436 04406. **- த.செந்தில்குமார், காரைக்குடி.**

## கால்நடைகளுக்கான காப்பீடு திட்டங்கள்



வேளாண்மைக்கு அடுத்த உப தொழிலாக கால்நடைகள் வளர்ப்பு, உழவர்களுக்கு கணிசமான வருமானம் தருகிறது. பருவமழை பொய்க்கும் பொழுதெல்லாம் உழவர்களுக்கு உறுதுணையாக உதவுவது கால்நடை வளர்ப்பே. தற்போது பால் உற்பத்திக்காக நாட்டு இன கறவை மாடுகளை தவிர்த்து கலப்பின மாடுகளை

விவசாயிகள் பராமரிக்கின்றனர். குறிப்பாக ஒரு நாளைக்கு 20 லிட்டர் வரை பால் கறக்கும் பசுக்களை விவசாயிகள் பலர் சர்வ சாதாரணமாக வளர்க்கின்றனர்.

**தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் வாரி வழங்கும் மானியங்கள்**



இத்திட்டத்தின் கீழ் சான்று விதை உற்பத்தி செய்திட மெட்ரிக் டன் ஒன்றுக்கு 8000 ரூபாய் மானிய ஊக்கத்தொகை வழங்கப்படும். சான்று விதை விநியோகம் செய்திட மெட்ரிக் டன் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாய் மானியம். நெல் இயந்திர நடவு எக்டேருக்கு 5 ஆயிரம் ரூபாய், நாற்றங்கால் தட்டு ஒன்றுக்கு 40 ரூபாய். 8 எச்.பி., திறன் கொண்ட பவர் டில்லர் வாங்கிட ஆதி திராவிடர், பழங்குடியினர், குறு மற்றும் சிறு பெண் விவசாயிகளுக்கு 50 ஆயிரம் ரூபாய் அல்லது 50 சதவிகித மானியம். இதர விவசாயிகளுக்கு 40 ஆயிரம் ரூபாய் அல்லது 40 சதவிகித மானியம். 8 எச்.பி.,க்கு மேல் திறன் கொண்ட பவர் டில்லர் வாங்கிட ஆதி திராவிடர், பழங்குடியினர், சிறு மற்றும் குறு பெண் விவசாயிகளுக்கு 75 ஆயிரம் ரூபாய் அல்லது 50 சதவிகித மானியம் உண்டு. இதர விவசாயிகளுக்கு 60 ஆயிரம் ரூபாய் அல்லது 40 சதவிகித மானியமும், இயந்திர நடவு முறை விளம்பரப்படுத்துதலுக்கு ஒரு லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது.

## வயல்தோறும் பலன் தரும் 'பண்ணைக்குட்டைகள்'



பண்ணைக்குட்டைகள், மழை நீரை சேமிக்க மட்டுமல்லாது ஏராளமான பயன்களை அளிக்கிறது. விவசாயிகள் தங்களது நிலத்தில் பண்ணைக்குட்டை அமைத்து விவசாயத்தில் சாதனை படைக்கலாம்.

இயற்கையின் சவாலை சந்திக்கும் உத்திகளில் மிகவும் எளிய முறை பண்ணைக்குட்டைக்கு உண்டு. மழைநீரை சேமிக்க குளங்கள் வெட்டுதல், சம உயர வரப்பு வெட்டுதல், கசிவு நீர் குட்டை அமைத்தல், திருப்பணை கட்டுதல், பாத்திகள் போன்ற பல வகையான உத்திகள் கையாளப்படுகின்றன. ஆனால் இவற்றில் மிகச்சிறந்ததும் எளிய முறையில் நீரை சேமித்து முழுப்பலனை அளிக்கக்கூடியதாகவும் இருப்பது பண்ணைக்குட்டைகள் மட்டுமே.

மழைக்காலங்களில் பெறப்படும் 30 சதவிகிதத்திற்கு மேலான மழை நீர் வழிந்தோடி ஆற்றிலும், பின் கடலிலும் கலந்து வீணாகிறது. பண்ணைக் குட்டைகள் அமைப்பதால் மழை நீரானது வீணாவது தடுக்கப்படுகிறது. பண்ணைக்குட்டைகள் அமைப்பதால் நிலத்தில் விடும் ஒவ்வொரு மழை துளியும் வழிந்தோடி வீணாகாமல் இருக்க உதவுகிறது.

## தைல மரங்களால் அழிகிறது விவசாயம் நீர்வரத்தை நிறுத்த தடுப்புக் குழிகள்

காரைக்குடி, சிவகங்கை மாவட்டத்தில் வனத்தோட்ட கழகத்துக்கு சொந்தமான தைல மர காடுகளில் குழிகள் வெட்டப்பட்டு, வரப்புகள் அமைக்கப்படுவதால் கண்மாய்களுக்கு வரும் மழைநீர் முடங்கும் அபாயம் உள்ளது. 'யூகலிப்டஸ்' தைல மரம் காகிதம்,அட்டை தயாரிக்க பயன்படுகிறது. 300 மி.மீ.,லிருந்து 1500 மி.மீ.,வரை மழையளவு உள்ள வறண்ட மற்றும் சமவெளி பகுதிகளில் செழித்து வளரும் இயல்புடையது. தமிழ்நாடு வனத்தோட்ட கழகம்

மூலம் தமிழகத்தில் 75 ஆயிரம் எக்டேரில் தைல மரங்கள் வளர்க்கப்பட்டு, மாநிலத்தில் 80 சதவீத தேவை பூர்த்தி செய்யப்படுகிறது. ஆண்டுக்கு 3 லட்சம் டன் மரங்கள் காகித ஆலைகளுக்கு கிடைக்கிறது. தனியார் மூலம் 50 ஆயிரம் டன் கிடைக்கிறது.

ஒரிடக்கில் பயிரிடப்படும் மரங்கள் ஆறு ஆண்டுகளில் வெட்டப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் உழவு மூலம் மரங்களுக்கு இடையில் உள்ள மண் கிளறி விடப்படுகிறது. இதனால்,காட்டாற்று வெள்ளம் கரை புரண்டு ஓடினாலும், யூகலிப்டஸ் காடுகளை தாண்டி மழை நீர் வர வாய்ப்பில்லாமல் போகிறது. இந்நிலையில் வனத்தோட்ட கழகம் மூலம்,யூக்கலிப்டஸ் காடுகளில் ஒரு எக்டேருக்கு 111 மீட்டர் நீளமுள்ள குழி வெட்டப்பட்டு, மழை நீரும் மண்ணும் அந்த பகுதியை விட்டு செல்லாத அளவு கரை அமைக்கப் படுகிறது.

சிவகங்கை மாவட்டம்

பள்ளத்துார் பகுதியில் வனத்தோட்ட கழகத்துக்கு சொந்தமான பகுதியில் நேற்று வனத்துறை அலுவலர்கள் கரை அமைத்தபோது, பள்ளத்துார் கண்மாய் விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து, வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஜி.சோமு, பி.இ., பட்டதாரி, பள்ளத்துார்: சிவகங்கை மாவட்டத்தில் அரை கி.மீ.,க்கு ஒரு கண்மாய் இருக்கிறது. மழை நேரங்களில் அனைத்து கண்மாயும் நிரம்பி வழிந்தது. தற்போது மழை பெய்தாலும் நிரம்பாத அளவு யூகலிப்டஸ் மரங்கள் காட்டாற்று வெள்ளத்தை தடுத்து நிறுத்தி வருகிறது. மேய்ச்சல் நிலங்கள் எல்லாம் காடாக மாறி வருகிறது.

தற்போது மண் அரிப்பை தடுக்கிறோம் என்ற பெயரில், பள்ளத்துார் கீழகுடியிருப்புக்கு கீழ் பகுதியில் யூகலிப்டஸ் காட்டில் ஐந்து இடங்களில் 200 மீட்டர் நீளத்துக்கு மூன்று அடி ஆழம், ஐந்தடி நீளத்துக்கு குழிதோண்டி நீர் அதைவிட்டு செல்லாத அளவு தடுப்புகளை அமைத்துள்ளனர். இந்த மரங்கள் தண்ணீரை முழுவதும் உறிஞ்சி விடும். மழை பெய்தாலும் இந்த வரப்புகளை தாண்டி தண்ணீர் வராது. கருவியப்பட்டி, வடகுடி பகுதி மக்கள் தண்ணீர் இல்லாததால் விவசாயத்தை கைவிட்டு விட்டனர். தற்போது பள்ளத்துார் விவசாயிகளுக்கும் அதே நிலை ஏற்பட்டுள்ளது.

கே.எம்.குமாரசாமி: பள்ளத்துார் கண்மாய் மூலம் 160 ஏக்கர் விவசாயம் நடக்கிறது. இதில், விவசாயம் செய்பவர்கள் ஓய்வு பெற்ற அரசு அலுவலர்கள், படித்த பட்டதாரிகள், சிங்கப்பூரில் பணியாற்றி விட்டு, சொந்த ஊரில் விவசாயம் செய்து பசுமை புரட்சியை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள். ஆர்வத்தை தடுத்து நிறுத்தும் வகையில், வனத்துறையினர் யூகலிப்டஸ் காட்டுக்குள் குழிகளை வெட்டி, வரப்புகளை அமைத்து வருகின்றனர். உள்ளூரிலேயே கண்ணீர் வரத்தை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை வனத்துறை எடுக்கிறது. புதுவயல் வனச்சரகர் மணிவண்ணனிடம் கேட்டபோது, 'மண் அரிப்பை தடுக்கவும், நிலக்கடி நீரை பெருக்கவும், யூகலிப்டஸ் காட்டு பகுதியில் 'பண்டு' கரை அமைத்து வருகிறோம். பள்ளத்துார் விவசாயிகள் கேட்டு கொண்டதற்கு இணங்க அவர்கள் கண்மாய்க்கு தண்ணீர் செல்ல வரத்துக்கால்வாய் அமைத்து கொடுத்து உள்ளோம்," என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## புது இஞ்சி வரத்து அதிகரிப்பால் கிலோ ☐ 30ஆக விலை சரிவு

சேலம்: ஊட்டியில் இருந்து புது இஞ்சி வரத்து அதிகரிப்பால், சேலம் மார்க்கெட்டில் இஞ்சி விலை சரிந்துள்ளது. ஊட்டி, பத்தேரி, கூடலூர் உள்ளிட்ட பகுதியில் இஞ்சி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த பகுதிகளில் இருந்து தமிழகம் மற்றும் வட மாநிலங்களுக்கு இஞ்சி அனுப்பப்படுகிறது. தற்போது இப்பகுதிகளில் இஞ்சி விளைச்சல் அதிகரித்துள்ளதால், வழக்கத்தைவிட வரத்து கூடியுள்ளது. சேலம் பால் மார்க்கெட்டுக்கு 20 டன் இஞ்சி வந்து கொண்டிருக்கிறது. இஞ்சி வரத்து அதிகரிப்பால் விலை சரிந்துள்ளது.

இது குறித்து செவ்வாய்பேட்டை பால்மார்க்கெட் இஞ்சி மொத்த வியாபாரிகள் கூறுகையில்,'' ஊட்டியில் இருந்து புது இஞ்சி வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக கடந்த வாரத்தை விட நடப்பு வாரத்தில் இஞ்சி விலை குறைந்துள்ளது. கடந்த வாரம் புது இஞ்சி (மொத்த விலையில்) கிலோ ☐ 40 என விற்றது. நேற்று

கிலோவுக்கு □ 10 சரிந்து, □ 30 என விலை சரிந்தது. □ 80க்கு விற்ற பழைய இஞ்சி □ 60 முதல் □ 60 என விற்கப்பட்டது,'' என்றனர்.

**பரமத்தி வேலூரில் வெற்றிலை விலை உயர்வு**

பரமத்திவேலூர்: பரமத்தி வேலூரில் நேற்று நடைபெற்ற ஏலத்தில் வெற்றிலை விலை உயர்ந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளான பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், குப்புச்சிப்பாளையம், நன்செய் இடையாறு, பாலப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் காவிரி ஆற்று படுகையில் வெற்றிலை சாகுபடி பிரதானமாக உள்ளது.

இங்கு விளையும் வெற்றிலைகள் கர்நாடகம், கேரளம், குஜராத், மகாராஷ்டிரா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், சேலம், கோவை, மதுரை மற்றும் திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களுக்கும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. நேற்று நடைபெற்ற ஏலத்தில் வெற்றிலை விலை உயர்ந்தது. பயிர் வெற்றிலையின் பருவம் இல்லாததாலும், வெற்றிலையின் வரத்து குறைந்திருந்ததாலும் விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில், வெள்ளைக்கொடி முதல் ரகம் வெற்றிலை (இளம்பயிர் மார்) 104 கவுளி கொண்ட சுமை ஒன்று □4 ஆயிரத்துக்கும், 2வது ரகம் □3 ஆயிரத்துக்கு, கற்பூரி வெற்றிலை முதல் ரகம் (இளம்பயிர் மார்) சுமை ஒன்று □3 ஆயிரத்துக்கும், 2வது ரகம் □2 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டது.

நேற்றைய ஏலத்தில் வெள்ளைக்கொடி முதல் ரகம் வெற்றிலை (இளம்பயிர் மார்) 104 கவுளி கொண்ட சுமை ஒன்று □5 ஆயிரத்துக்கும், 2வது ரகம் □4 ஆயிரத்துக்கும், கற்பூரி வெற்றிலை முதல் ரகம் (இளம்பயிர் மார்) சுமை ஒன்று □4 ஆயிரத்துக்கும், 2வது ரகம் □3 ஆயிரத்துக்கும் ஏலம் போனது.

**ராகி விலை கிடுகிடு உயர்வு**

தேன்கனிக்கோட்டை: தேன்கனிக்கோட்டையில் மானவாரி பயிராக ராகி, நிலக்கடலை, சோளம், எள், அவரை, துவரை, கொள்ளு, சாமை, தினை உள்ளிட்ட பயறு வகைகள் அதிகளவில் விளைவிக்கப்படுகிறது. இந்நிலையில், தென்மேற்கு பருவமழை பெய்யாததால், ராகி பயிர் வயலிலேயே கருகி விட்டது. மேலும் எள், அவரை, துவரை, கடுகு, கொள்ளு என அனைத்து தானியங்களும் இந்த வருடம் விளைவிக்க முடியாமல் போனது.

விளைச்சல் முழுமையாக இல்லாததால் ராகி விலை இரு மடங்களாக உயர்ந்துள்ளது. கடந்த ஜூன் மாதம் ராகி குவிண்டால் □1400 முதல், □1500 வரை விற்பனையானது. தற்போது ராகி விலை உயர்ந்து, குவிண்டால் □2200 முதல் □2500 வரை விலை உயர்ந்துள்ளது. கொள்ளு குவிண்டல் □2200ல் இருந்து தற்போது □3500 ஆக உயர்ந்துள்ளது. இதே போல் எள், அவரை, துவரை, சாமை, தினை வகைகளின் விலையும் தாறுமாறாக உயர்ந்துள்ளது.

## ரூ.1.78 கோடிக்கு கொப்பரை ஏலம்

ஈரோடு : பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரம் இருமுறை ஏலம் நடைபெற்று வருகிறது. பெருந்துறை மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான விவசாயிகள் இந்த ஏலத்தில் பங்கேற்பது வழக்கம். இந்த வாரம் நடைபெற்ற முதல் ஏலத்தில் 5,732 மூட்டைகளில் 2 லட்சத்து 85 ஆயிரம் கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில் முதல் தர கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ.62.25க்கும் அதிகபட்சமாக ரூ.65க்கும் விற்பனையானது. இரண்டாம் தர கொப்பரை குறைந்தபட்சமாக கிலோ ரூ. 41.50க்கும், அதிகபட்சமாக ரூ.61.40க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ.1 கோடியே 78 லட்சத்துக்கு ஏலம் நடந்ததாக கூட்டுறவு சங்க அதிகாரிகள் கூறினர்.

## கோவை வர்த்தக மையத்தில் தேயிலைத்தூள் ரூ.5 கோடிக்கு விற்பனை

கோவை : கோவை தேயிலை வர்த்தக மையத்தில் புதன்கிழமை மாலைதோறும் ஏல முறையில் தேயிலைத்தூள் விற்பனை நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த விற்பனைக்கு, உள்ளூர் ரகம் (டஸ்ட்) 3.14 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில், 2.05 லட்சம் கிலோ விற்பனையானது. 131 வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரி விற்பனை விலை கிலோ ரூ.103.05. விற்பனை மதிப்பு ரூ.3.14 கோடி.

ஏற்றுமதி ரகம் (லீப்) 2.03 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது.

1.92 லட்சம் கிலோ விற்பனையானது. 108 வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரி விற்பனை விலை கிலோ ரூ.96.45. விற்பனை மதிப்பு ரூ.1.86 கோடி. கடந்த வாரம் தீபாவளியை முன்னிட்டு ஏலத்திற்கு விடுமுறை விடப்பட்டது. அதற்கு முந்தைய வார விற்பனையோடு ஒப்பிடுகையில், உள்ளூர் ரகம் கிலோவுக்கு ரூ.1.42ம், ஏற்றுமதி ரகம் கிலோவுக்கு 43 பைசாவும் அதிகரித்துள்ளது.

மொத்தத்தில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் ரூ.5 கோடியே 78 ஆயிரத்திற்கு விற்றுள்ளது. இது, கடந்தவார விற்பனையை காட்டிலும் ரூ.1.50 கோடி அதிகமாகும். தேயிலை விற்பனை விலை தொடர்ந்து 2 மாதமாக உயர்ந்த நிலையிலேயே உள்ளது. மேலும் கடந்த வாரம் விற்பனை நடக்காததால், அன்று வரவேண்டிய தேயிலைத்தூள் வரத்து நேற்று முன்தினம் விற்பனைக்கு வந்ததால், வரத்தும், விற்பனையும் அதிகரித்துள்ளது. இதேபோல் அடுத்த வாரமும் அதிகரிக்கும் என தேயிலை வர்த்தக மைய செயலாளர் குமார் கூறினார்.

## கல்லாபுரம் பாசன பகுதியில் பருவ மழையால் தப்பியது நெல்

உடுமலை, : அமராவதி அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் அணை நீர்மட்டம் சரிந்து கொண்டிருக்கிறது. ஆனால், குறித்த நேரத்தில் வட கிழக்கு பருவமழை பெய்ததால் நெற் பயிர்கள் செழித்து வளர்கின்றன.

அமராவதி அணையால் திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. கல்லாபுரம், ராமகுளம் ராஜவாய்க்கால்கள்

நேரடி பாசனத்தில் உள்ளன. இங்கு 3,500 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் கல்லாபுரம் பாசனத்தில் 800 ஏக்கரிலும், ராமகுளம் வாய்க்கால் பாசனத்தில் 750 ஏக்கரிலும் நெல் சாகுபடி செய்யப்பட்டது. கடந்த ஜூலை மாதம் முதல் தொடர்ந்து நீர் திறப்பால் 90 அடி நீர்மட்டம் கொண்ட அணை நீர்மட்டம் சரிந்தது. நெற் பயிர் விளையுமா என்ற சந்தேகம் விவசாயிகள் மனதில் எழுந்தது. இந் நிலையில், வட கிழக்கு பருவமழை பெய்யத் துவங்கியது. கல்லாபுரம் பகுதியில் மழை தொடர்ந்து பெய்து வருவதால் நெற் பயிர் செழித்து வளர்கிறது. இது விவசாயிகளை மகிழ்ச்சியில் ஆழ்த்தி உள்ளது.

## விதை பரிசோதனை நிலையத்தில் ஆய்வு

ஊட்டி, : ஊட்டியில் உள்ள விதை பரிசோதனை நிலையத்தில் மாநில விதைச்சான்று மற்றும் விதை ஆய்வு உயர் அதிகாரிகள் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். மாநில விதைச்சான்று இணை இயக்குநர் நடேசன், மாநில விைத ஆய்வு ைஇண இயக்குநர் பாண்டியராஜன் ஆகிேயார் ஊட்டியில் உள்ள விதை பரிசோதனை நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின் போது, விதை பரிசோதனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட விதைகளின் விவரம் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. விதை பரிசோதனை முறைகள், விதைகளின் முளைப்பு திறன் கணக்கெடுப்பு, விதை பரிசோதனை முடிவுகள் ஆகியவை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து அதிகாரிகள் கூறுகையில், விைதயின் தரம் என்பது விதையின் முளைப்புத்திறன் மற்றும் புறத்தூய்மை, பிற கலப்பு ஆகியவற்றை பொறுத்ததாகும். தரமுள்ள விதைகளை விதைப்பு செய்வதால் பயிர்களின் எண்ணிக்கை பராமரிக்கப்படுவதுடன் அதிக மகசூலுக்கும் வித்திடுகிறது. எனவே, நீலகிரி மாவட்ட விவசாயிகள் மகசூலில் இழப்பு ஏற்படுவதை தவிர்க்க பயிரிடும் விதைகளின் முளைப்புத்திறன் குறித்து பரிசோதித்து பயிரிட்டு லாபம் அடைய வேண்டும், என்றனர்.

மேலும், பரிசோதனை நிலையத்தில் மேற்கொள்ளப்படும் பரிசோதனை முறையை மேம்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்தும் அறிவுறுத்தப்பட்டது. ஆய்வின் போது கோவை வேளாண்மை அலுவலர் மற்றும் விதை ஆய்வாளர் உடன் இருந்தனர்.

## சிறு தானியங்கள் குறித்த பிரசாரம்

கோத்தகிரி : கோத்தகிரி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் சிறு தானிய கூட்டமைப்பு மற்றும் நீலகிரி மாவட்ட பெண்கள் இணைப்பு குழு சார்பில் சிறு தானியங்கள் குறித்து பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கு ஒருங்கிணைப்பாளர் சாராள் தலைமை தாங்கினார். இந்த பிரசாரத்தின் போது, சோளம், கம்பு, கேழ்வரகு, தினை, சாமை குதிரைவாலி போன்ற சிறு தானியங்கள் குறித்தும், அதன் நன்மைகள் குறித்தும் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இது குறித்து ஒருங்கிணைப்பாளர் சாராள் கூறியதாவது, தற்போதைய காலக்கட்டத்தில் சிறு தானியங்களின் பயன்பாடு மிகவும் குறைந்து விட்டது. இதையொட்டி பிரசாரம் மேற்கொண்டு வருகிறோம். விவசாயத்தில் அதிகமான பூச்சிக்கொல்லி மருந்துகள், ரசாயன உரங்கள் பயன்படுத்துவதால் சர்க்கரை நோய் உள்பட பல்வேறு நோய்கள் ஏற்படுகிறது. இந்த பிரச்சனைகளை தீர்க்கும் விதமாக தற்போதுள்ள பருவநிலை மாற்றங்களால் வழக்கமான பயிர்களின் விளைச்சல் பாதிக்கப்படும் போதும், எத்தகைய சூழ்நிலையிலும் வளரக்கூடிய சத்தான மருத்துவ குணம் கொண்ட சிறு தானிய உற்பத்தியை ஊக்கப்படுத்த வேண்டும் என கூறினார்.

## பட்டுக்கோட்டையில் விதைநெல் கிராம திட்ட பயிற்சி

பட்டுக்கோட்டை : வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான விதைநெல் கிராமத்திட்ட பயிற்சி பட்டுக்கோட்டையில் நடந்தது. தஞ்சாவூர் வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) இளஞ்செழியன் தலைமை வகித்தார். வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) சாருமதி வரவேற்றார். வேப்பங்குளம் தென்னை ஆராச்சி நிலைய பேராசிரியர் ராஜேந்திரன் விதை உற்பத்தியின் முக்கியத்துவம் குறித்து விளக்கமாக பயிற்சியளித்தார்.

வேளாண்மை துணை இயக்குனர் (மாநில திட்டம்) (பொ) ஈஸ்வர் விதை பண்ணை அமைத்து தங்கள் பகுதிக்கு தேவையான விதைகளை தாமாகவே உற்பத்தி செய்யும் பொருட்டு விளக்கினார். விதைச்சான்று துறை வேளாண்மை உதவி இயக்குநர் பாலசரஸ்வதி, வேளாண்மை ஆராச்சி நிலைய உதவிப் பேராசிரியர் பாரதி விதைச்சான்று வேளாண்மை அலுவலர் ஆனந்தபிரியா, வேளாண்மை அலுவலர் மாலதி ஆகியோர் வேளாண் நுட்பம் குறித்து விளக்கம் அளித்தனர்.

## திருந்திய நெல் சாகுபடி முறைக்கு நாற்றங்கால் அமைப்பது எப்படி? வேளாண் அதிகாரி விளக்கம்

பட்டுக்கோட்டை : திருந்திய நெல் சாகுபடி முறைக்கு தேவையான இளம் நாற்றுக்களை தயார் செய்வது எப்படி என்பது பற்றி திருவோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் மதியரசன் விளக்கம் அளித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

14 நாட்களில் தகுதியான நாற்றுக்களை பெற திருத்தியமைக்கப்பட்ட பாய் நாற்றங்கால் முறையை பயன்படுத்த வேண்டும். இதற்கு நல்ல வடிகால் வசதியுடன் நீர் ஆதாரத்திற்கு அருகாமையில் நாற்றங்காலை அமைக்க வேண்டும்.

ஒரு ஏக்கர் நடவு செய்ய தேவையான 3 கிலோ விதையினை 40 சதுரமீட்டர் பரப்பு (1 சென்ட்) நாற்றங்காலில் விதைக்க வேண்டும். முன்னதாக 1மீ அகலமும், 40மீ நீளமும், 5 செ.மீ உயரமும் கொண்ட மேட்டுப்பாத்திகள் அமைக்க வேண்டும். பாத்தியின் மேல் 300 கேஜ் கனமுள்ள வெள்ளை (அல்லது) கருப்பு பாலித்தீன் விரிப்பு (அல்லது) பாலித்தீன் உரச்சாக்குகளை விரிக்க வேண்டும். நீளம் மற்றும் அகல வாக்கில் 4 கட்டங்களாக தடுக்கப்பட்டு 1மீ நீளம், 0.5மீ அகலம், 4 செ.மீ உயரம் கொண்ட மரத்தாலான விதைப்புச் சட்டம் தயார் செய்து அதனை பாலித்தீன் விரிப்புக்கு மேல் சரியாக சமன்பட வைக்க வேண்டும்.

1 கிலோ வளமான வயல் மண்ணுடன் 1/2 கிலோ நன்கு பொடியாக்கிய டி.ஏ.பி. உரத்தை சேர்த்து விதைப்பு சட்டத்துக்குள் முக்கால் அளவிற்கு நிரப்ப வேண்டும். அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போபாக்டீரியாவுடன் விதை நேர்த்தி செய்யப்பட்ட 3 கிலோ முளை கட்டிய விதையை 0.5 ச.மீ சட்டத்துக்குள் 45 கிராம் என்றளவில் விதைத்து பின் மண்ணால் நன்கு மூடி விட வேண்டும். பின்னர் பூவாளியால் அடி வரை நனையும் அளவிற்கு தண்ணீர் தெளித்து சட்டத்தை வெளியில் எடுக்க வேண்டும்.

விதையினை விதைத்தபின் தென்னை ஓலை (அல்லது) வைக்கோலைக் கொண்டு விதைத்த பாத்திகளை மூடிவிட்டு 8 நாள் கழித்து தென்னை ஓலை (அல்லது) வைக்கோலை எடுத்துவிட வேண்டும். பின்னர் 5 நாட்கள் வரை பூவாளியால் தண்ணீர் தெளித்த பின் பாத்திகள் நனையும் வகையில் வாய்க்காலில் தண்ணீர்

கட்ட வேண்டும். யூரியா கரைசல். பின்னர் விதைத்த 9ம் நாள் 0.5 சதம் யூரியா கரைசல் பூவாளி மூலம் மாலை வேளையில் தெளிக்க வேண்டும்.

சரியாக 14வது நாளில் சிறிய சதுர சட்டத்துக்குள் உள்ள 12 முதல் 16 செ.மீ உயரமுடைய 2 இலை கொண்ட வாளிப்பான இளம் நாற்றுக்களை மெதுவாக அசைத்து பிரித்து எடுத்து நடவு வயலுக்கு கொண்டு சென்று அங்கு நாற்றுக்களின் வேர் அறுபடாமல் எடுத்து குத்துக்கு ஒரு நாற்றாக 22.5 செ.மீ இடைவெளியில் சதுர முறையில் நடவு செய்ய வேண்டும். இதற்கு கிராம வழக்கில் "ஒற்றை நாற்று நடவு முறை" என்று சொல்வதும் உண்டு. இவ்வாறு அதில் குறிப்பிட்டுள்ளார்.

## நெல் வயல் வரப்புகளில் பயறுவகை பயிர்களை விதைத்து பயன்பெறலாம் விவசாயிகளுக்கு யோசனை

நீடாமங்கலம் : நெல் வயல் வரப்புகளில் பயறுவகை பயிர்களை விதைத்து விவசாயிகள் பயன்பெறலாம் என்று செயல்விளக்கம் முகாமில் அறிவுரை வழங்கப்பட்டது. நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் ஆதனூர் மற்றும் ராயபுரம் கிராமத்தில் நெற்பயிரில் நன்மை செய்யும் பூச்சிகளின் பெருக்கத்தை அதிகரிக்க வரப்பில் உளுந்து உள்ளிட்ட பயறுவகை பயர்கள் விதைத்தலை பரவலாக்கம் செய்ய முதல்நிலை செயல்விளக்க பயிற்சி முகாம் நடந்தது. நிலைய ஒருங்கிணைப்பாளர் பாஸ்கரன் தலைமை வகித்தார். பூச்சியியல்துறை உதவி பேராசிரியர் ராஜாரமேஷ் பங்கேற்று பேசுகையில், நெற்பயிரை பல்வேறு வகையான பூச்சிகள் தாக்கி தேசத்தை உண்டாக்கி மகசூல் இழப்பை ஏற்படுத்துகிறது.

அவற்றை கட்டுப்படுத்த விவசாயிகள் பெரும்பாலும் ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளையே அதிகம் பயன்படுத்துவதால் நிலம், நீர் மாசுபடுகிறது. தானியங்களில் நஞ்சாக தங்கி பல்வேறு தீய விளைவுகளை மனிதர்களுக்கும் மற்ற உயிர்களுக்கும் தோற்றுவிக்கின்றன. வயல்களில் இயற்கையாகவே காணப்படும் நன்மை செய்யும் பூச்சிகளான தட்டான், நீர் தாண்டி, தரை வண்டு, பொறி வண்டு, இடுக்கிவால் பூச்சிகள், தொழு வெட்டுக்கிளி, ஒட்டுண்ணி குளவிகள் மற்றும் சிலந்திகளும் ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளால் பாதிக்கப்படுகின்றன.

எனவே நன்மை செய்யும் பூச்சிகளை பாதுகாப்பதற்கு அவற்றிற்கான வாழிடங்களை ஏற்படுத்தவும் வரப்புகளில் உளுந்து உள்ளிட்ட பயறுவகை

பயிர்களை விதைக்க வேண்டும். மேரிகோல்டு, சூரியகாந்தி, வெண்டை, எள் உள்ளிட்ட பயிர்வகைளை வளர்ப்பதால் நன்மை செய்யும் பூச்சிகள் அதிகளவில் கவர்ந்திழுக்கப்பட்டு பல்கி பெருகி நெல் பயிருக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிகளை உண்டு அழிப்பதால் சுற்றுச்சூழல் பாதுகாப்பதுடன் உணவு தானியங்களில் எஞ்சிய நஞ்சாக தங்குவது தவிர்க்கப்படுகிறது.

எனவே விவசாயிகள் அனைவரும் நெல் வயல் வரப்புகளில் உளுந்து உள்ளிட்ட பயறுவகை பயிர்களை விதைத்தும், பூக்கும் தாவரங்களை நட்டும் பயன்பெறலாம் என்றார். நிலைய உதவி பேராசிரியர் காமராஜ், சிவக்குமார் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## வள்ளுவக்குடியில் விதை கிராம திட்ட பயிற்சி முகாம்

*சீர்காழி : சீர்காழி அருகே வள்ளுவக்குடி கிராமத்தில் விவசாயிகளுக்கு* வேளாண்மைத்துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டம் - அட்மா திட்டத்தின்கீழ் விதை கிராம திட்ட பயிற்சி முகாம் நடந்தது. மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சேகர் தலைமை வகித்தார். சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் மெய்யப்பன், விதை சான்று அலுவலர் சுகந்தி, உதவி விதை அலுவலர் உமாபசுபதி முன்னிலை வகித்தனர்.

வேளாண்மை உதவி இயக்குநர் மோகன்தாஸ் வரவேற்றார். விதை கிராம திட்டத்தின் நோக்கம், பயிர் காப்பீடு திட்டத்தின் முக்கியத்துவம், உழவியல் தொழில்நுட்பம், வயல் ஆய்வு கலவன் நீக்குதல், சான்றட்டை பொருத்துதல் மற்றும் விதைமாதிரி எடுத்தல், விதைத்தேர்வு, சான்று ஆதார விதை மற்றும் வல்லுநர் விதை, தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. முகாமில் 40க்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர். ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர் ராமன், அட்மா திட்ட உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் ராஜசேகரன், செல்வகுமரன் செய்திருந்தனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் பார்கவி நன்றி கூறினார்.

## வேதாரண்யத்தில் 16 மி.மீ. மழை

நாகை : நாகை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை கடந்த 31ம் தேதி முதல் பெய்து வருகிறது. கடந்த 2ம் தேதி ஒரே இரவில் மிக அதிக அளவாக 415.70 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. நேற்று முன்தினம் முதல் மழை பெய்யவில்லை. நேற்று மிதமான வெயில் அடித்து கொண்டிருந்தது. விசாகப்பட்டினத்துக்கு தென்கிழக்கே வங்க கடலில் 650 கி.மீ. தூரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி இருப்பதால் நாகை துறைமுகத்தில் 1ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு நேற்று 2வது நாளாக ஏற்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு வேதாரண்யம் பகுதியில் மட்டும் 16 மி.மீ. மழை பெய்துள்ளது.

## டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் கொசுவை கட்டுப்படுத்த நீர்நிலைகளில் கம்பூசியா மீன் வளர்ப்பு அறிமுகம்

காரைக்கால்: காரைக்காலில் டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் கொசுக்களை கட்டுப்படுத்த நீர்நிலைகளில் கம்பூசியா மீன் வளர்ப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் வேகமாக பரவி வரும் டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துமாறு கலெக்டர் பார்திபன் உத்தரவிட்டுள்ளார். அதன்படி காரைக்கால் மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் டெங்கு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நலவழித்துறை நடத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக காரைக்காலில் டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் கொசுக்களை கட்டுப்படுத்த மாவட்ட நலத்துறை சார்பில் நகர் மற்றும் கிராம பகுதிகளில் உள்ள நீர்நிலைகளில் கம்பூசியா மீன் வளர்ப்பு முறை அறிமுகம் செய்யப்பட்டு வருகிறது. முதல்கட்டமாக கலெக்டர் அலுவலகம் எதிரில் உள்ள சிறுவர் பூங்காவில் பயன்பாடில்லாத செயற்கை நீரூற்றில் 50 கம்பூசியா மீன் விடப்பட்டது.

இதுகுறித்து நலவழித்துறை மலேரியா நோய் தடுப்பு தொழில்நுட்ப உதவியாளர் சேகர் கூறுகையில், காரைக்காலின் பல்வேறு கிராமங்கள், நகர் பகுதிகளில் நலவழித்துறை ஊழியர்கள் ஆய்வு செய்து குடியிருப்பு பகுதிகளில் தண்ணீர் தேங்க விடாமல் சுத்தமாக வைத்திருக்குமாறு வலியுறுத்தி வருகிறோம். டெங்கு கொசுக்கள் எவ்வாறு உருவாகிறது. அது எந்த நேரத்தில் கடிக்கும், டெங்கு

காய்ச்சலுக்கான அறிகுறி, அதிலிருந்து பாதுகாத்து கொள்ளும் முறை குறித்து துண்டு பிரசுரம், திரைக்காட்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம்.

அதன் தொடர்ச்சியாக நீர்நிலைகளில் மாவட்ட மீன்வளத்துறையிடமிருந்து 3,000 கம்பூசியா மீன்குஞ்சுகளை வாங்கி விட்டு வருகிறோம். இம்மீன் குஞ்சு 5 செ.மீ வரை மட்டுமே வளரும். டெங்கு காய்ச்சலை ஏற்படுத்தும் கொசுக்கள் மற்றும் அதன் முட்டை, லார்வாக்களை இம்மீன் விரும்பி உண்ணும். அதனால் நீர்நிலைகளில் இம்மீன்களை விட்டு வருகிறோம் என்றார்.

## சாணார்பட்டி ஒன்றியத்தில் மானிய விலையில் வேளாண் இடுபொருட்கள்

கோபால்பட்டி : சாணார்பட்டி ஒன்றியத்தில் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் மற்றும் தானிய வகைகள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளதாக வேளாண்மை உதவி இயக்குநர் இளங்கோவன் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது: தற்போது பருவமழை துவங்கியுள்ளதால், சாணார்பட்டி ஒன்றியத்தில் விதைக்கு கிலோ ரூ. 10 மானியம் வழங்கப்படுகிறது. அதே போல மானாவாரியாக பயிரிடப்படும் கடலைக்கு ரூ. 25 மானியமும், கம்புவிற்கு ரூ.15 மானியமும் வழங்கப்படுகிறது.

இந்த தானியங்கள் அனைத்தும் சாணார்பட்டியில் உள்ள வேளாண்மை அலுவலகத்தில் தற்போது இருப்பு வைக்கப்பட்டுள்ளன. சிறு, குறு விவசாயிகளுக்கும் பெண் விவசாயிகள் மற்றும் ஆதிதிராவிட விவசாயிகளுக்கு விசை உழுவை ரூ. 75 ஆயிரம் மானியத்தில் வழங்கப்படுகிறது. இதன் மதிப்பு ரூ.1.64 லட்சம் ஆகும். விவசாயிகள் பயன்படுத்தும் கருவிகளுக்கு மானியம் வழங்கப்பட உள்ளதாகவும், அவற்றையும் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.